அம்புலிமாமா, பூந்தளிர், ராணிகாமிக்ஸ், இந்தியாருடே, துளிர், பாலமித்ரா, ராணி, கோகுலம் போன்ற சஞ்சிகைகளை சாவகச்சேரியில் பெறுவதற்கு
சோதி புத்தகசாலை
(மக்கள் கடைக்கு அருகில்)
கச்சாய் வீதி, சாவகச்சேரி
(சி-6772)

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சமூக அறிவியல் ஏடான "நங்கூரம்" சஞ்சிகையை சாவகச்சேரியில் பெற
சோதி புத்தகசாலை
(மக்கள் கடைக்கு அருகில்)
கச்சாய் வீதி, சாவகச்சேரி.
(சி-6772)

சுடர்:9 திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 19 திங்கட்கிழமை (03- 01 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 38

மூச்சந்தி முரளி



அப்ப...... உவர் 'செல்லா'க் காசு ஆனாலும் ஆயிடுவார் பாருங்கோ.........!

### அச்சுறுத்தலுக்கு விஜேதுங்க பணிய மாட்டாராம்

பெரும்பான்மையினரையோ எனது அரசையோ சிறுபான்மையினர் அச்சுறுத்திப் பணியவைக்க அனுமதிக்க மாட்டேன்.

—இவ்வாறு ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க "சண்டே ரைம்ஸ்" ஆங்கில வார இதழுக்கு அளித்த பேட்டி ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஐ.தே.க. அரசுக்கும் இ.தொ. காவுக்கும் இடையிலான உறவில் முறுகல் நிலை ஏற்பட்டிருப்பது குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் இப்படிச் சொன்னார். (உ-எ)

கீழ்ப்படிய மறுத்த 7 மாகாணசபை உறுப்பினர்களுக்கும் கல்தா:

# இ. தொ. கா. பொதுச் செயலாளர் பதவியில் இருந்து செல்லச்சாமி நேற்று தற்காலிகமாக நீக்கப்பட்டார்

## தாமாக இராஜினாமாச் செய்ய அவருக்கு இரண்டு வாரகால அவகாசம்

கொழும்பு, ஜன. 3

இ. தொ. கா. பொதுச் செயலாளர் பதவியில் இருந்து எம். எஸ். செல்லச்சாமியை நீக்குவது என்று இ. தொ. கா தேசிய சபை நேற்று ஹட்டனில் கூடித் தீர்மானித்தது.

பொதுச் செயலாளர் பதவியை இராஜினாமாச் செய்ய அவருக்கு இரு வார கால அவகாசம் வழங்குவது என்றும்:

அந்தக் காலத்துக்குள் அவர் இராஜினாமாச் செய்ய தவறும் பட்சத்தில் அது குறித்து பொருத்தமான நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை திரு. எஸ். தொண்டமானுக்கு வழங்குவது என்றும்—

அதுவரை பொதுச் செயலாளர் பதவியிலிருந்து செல்லச்சாமியை தற்காலிகமாக நீக்குவது என்றும் இ. தொ. கா. தேசிய சபை முடிவு செய்தது.

இ. தொ. காவின் முடிவை எதிர்த்து - மத்திய மாகாண சபையில் ஐ. தே. க அரசுக்கு ஆதரவாகச் செயற்பட்ட 7 மாகாண சபை உறுப்பினர்களையும் இ. தொ. காவிலிருந்து உடனடியாக நீக்குவது என்றும் இக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இவர்களுக்கு எதிராக வேண்டிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் அதிகாரமும் தொண்டமானுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தொண்டமானுக்கும் செல்லச்சாமிக்கும் இடையில் கடந்த சில நாட்களாக பிணக்கு ஏற்பட்டுள்ளதும்—

அதை அடுத்து அமைச்சர் தொண்டமான் இ. தொ. காவின் 40 லட்சம் ரூபாவை கையாடல் செய்துவிட்டார் என்று செல்லச்சாமி குற்றச் சாட்டு சுமத்தினார் என்பதும் தெரிந்தவையே.

தொண்டமானுடன் ஏற்பட்ட பிணக்கைத் தொடர்ந்து செல்லச்சாமி அரசாங்கத்துக்கு சார்பாக செயற்பட்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-ஒ-எ-6)

### அடுத்த நடவடிக்கை குறித்து விரைவில் தீர்மானிப்பேன்!

#### செல்லச்சாமி அறிவிப்பு

கொழும்பு, ஜன. 3

"எனக்கு அதிகார பூர்வமான முடிவுகள் தெரிவிக்கப் படவில்லை. நேற்று எடுக்கப் பட்டதாகக் கூறப்படும் முடிவுகள் எனக்கு அறிவிக்கப் பட்டதும் என்ன நடவடிக்கை எடுப்பது என்பது குறித்துத் தீர்மானிப்பேன்."

—இவ்வாறு எம். எஸ். செல்லச்சாமி கூறியதாக

(4ஆம் பக்கம் பார்க்க)

### இ. தொ. காவில் பிளவா? மறுக்கிறார் தொண்டமான்

கொழும்பு, ஜன. 3

தற்போது இ.தொ. காவில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிகள், 10 லட்சம் தோட்டத் தொழிலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட இ. தொ. காவில் பிளவை ஏற்படுத்தலாம் என்று கூறப்படுவதை அதன் தலைவர் எஸ். தொண்டமான் அடியோடு மறுத்தார்.

பலர் பல தடவைகள் இ. தொ. காவில் பிளவை ஏற்படுத்த முயற்சித்தனர். இப்படிப்பட்ட முயற்சிகளினால் இ. தொ. கா. பலவீனப்படப் போவதில்லை என்றார் அவர்.

செல்லச்சாமியின் அண்மைக் கால நடவடிக்கைகள் அவரின் பொதுச்செயலாளர் பதவிக்கு ஒவ்வாத வகையில் இருந்ததாகவும் —

மத்திய மாகாண சபை விவகாரத்தில் இ. தொ. காவின் முடிவை மீறிய 7 மாகாணசபை உறுப்பினர்களுக்கு உதவியும் ஊக்கமும் வழங்கியதன் மூலம் அவர் இ. தொ. காவின் நம்பிக்கையை இழந்து விட்டார் என்றும் தொண்டமான் சொன்னார்.

கடந்த சில வாரங்களாக பத்திரிகையாளர் மாநாடுகள் பலவற்றை செல்லச்சாமி

(4ஆம் பக்கம் பார்க்க)

### ஐ.தே.க. தலைமைக்கு விடுக்கப்பட்ட சவால்?

கொழும்பு, ஜன. 3

செல்லச்சாமியை நீக்கும் இ. தொ. காவின் தீர்மானத்தை ஐ.தே. கவின் தலைமைத்துவத்துக்கு எதிராக தொண்டமானால் விடுக்கப்பட்ட சவாலாகக் கருதலாம் என செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டது.

இந்த முடிவு 1977 முதல் பதவியில் இருக்கும் ஐ.தே. கவுக்கும் இ.தொ. காவுக்கும் இடையேயான கூட்டுக்கு ஓர் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது என்று பி.பி.ஸி. தெரிவித்தது. (உ-எ-6)

# விடுதலைப்புலிகளுடன் பேசுவதற்கு தயார் என்கிறார் ஜனாதிபதி விஜே!

## எனினும் தனிநாடு கோரிக்கையை ஏற்க முடியாது என்று அறிவிப்பு

கொழும்பு, ஜனவரி 3

சிறுபான்மை இன மக்களுக்குக் கூடுதலான அதிகாரங்களை வழங்குவதற்குத் தாம் ஆயத்தமாக இருப்பதாகவும் —

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேசுவதற்கும் தாம் தயார் என்றும் —

ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா, கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த செவ்வியில் தெரிவித்திருக்கிறார்.

ஆனால் விடுதலைப் புலிகளின், தனிநாடு கோரிக்கையைத் தம்மால் ஏற்க முடியாது என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

வடக்கு - கிழக்கு யுத்தம், அதனை முடிவுக்குக் கொண்டு வருவது, அமைச்சர் தொண்டமானுடனான பிணக்கு, மாகாண சபைகளின் நிலைமை என்பன உட்பட நாட்டின் அரசியல் சூழ்நிலைகள் மற்றும் தேர்தல்கள் குறித்து கொழும்பில் இருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்றுக்கு (ஞாயிறு பதிப்புக்கு) ஜனாதிபதி விரிவான செவ்வி ஒன்றை வழங்கி உள்ளார்.

அந்தச் செவ்வியில் அவர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### கொழும்பில் முக்கிய இடங்களில் வீதித் தடைகள்போடப்பட்டு வாகனங்கள் சோதனை!

கொழும்பு, ஜன. 3

தலைநகர் கொழும்பில், முக்கிய இடங்களில் தடைகள் போடப்பட்டு படையினரால் வாகனங்கள் சோதனையிடப்படுகின்றன.

கார்கள் போன்ற சிறிய ரக மோட்டார் வாகனங்களும், பிக்கப் போன்ற வாகனங்களும் தீவிர சோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றன. இரவிலும் கூட சோதனை நடவடிக்கை தொடர்கிறது.

இதேவேளை, வீடுகள், லொட்ஜுகள், விடுதிகள் போன்றவற்றில் தமிழர்கள் கைது செய்யப்படும் நடவடிக்கை குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

### இஸ்ரேலிய தயாரிப்பான 3 பீரங்கிப் படகுகளை வாங்க அரசாங்கம் முடிவு

யாழ்ப்பாணம், ஜன. 3

ஸ்ரீலங்கா கடற்படைக்கு அதிசக்திவாய்ந்த 3 இஸ்ரேலிய பீரங்கிப் படகுகளை அரசு கொள்வனவு செய்யவுள்ளது.

மூன்று நிறுவனங்கள் பீரங்கிப் படகுகள் தொடர்பான பூரண விவரங்களை பாதுகாப்பு அமைச்சிடம் வழங்கியிருந்தன. அவற்றைப் பரிசீலித்த பின்னர் இஸ்ரேல் தயாரிப்பான மூன்று படகுகளை வாங்குவது என பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

இதேவேளை—ஆழமற்ற கடற்பரப்பில் அதிவேகமாகச் செல்லும் படகுகளையும் கொள்வனவு செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன. 20 மி.மீ. பீரங்கிகள் 13X7 மி.மீ. கனரகத் துப்பாக்கிகள் பொருத்தப்பட்டவையாக மேற்படி படகுகள் விளங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-5)

### மட்டு. மகிழவெட்டுவானில் அதிரடிப் படையினரின் சூட்டுக்கு இளைஞர் பலி!

யாழ்ப்பாணம், ஜன. 3

மட்டக்களப்பு — மகிழவெட்டுவான் பகுதியில் கடந்த 27 ஆம் திகதி இளைஞர் ஒருவர் விசேட அதிரடிப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நரிக்குண்டுத்தோட்டத்தைச் சேர்ந்த ஜெயா எனப்படும் இளைஞரே சுட்டுக் கொல்லப்பட்டார்; வீதியில் சென்று கொண்டிருந்த சமயம் தேசத்துரோகிகளின் துணையுடன் படையினர் அவரைச் சுட்டுக் கொன்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை — செங்கலடிப் பகுதியில் படையினரால் இரு தமிழ் இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் இதுவரை விடுவிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-5)

### யுத்தத்தால் தீர்வு கிட்டாது: தெற்கு மக்களுக்கு புரிகிறது

#### பிரபல அரசியல் விமர்சகர் கருத்து

லண்டன், ஜன. 3

வடக்கு — கிழக்கு பிரச்சினைக்கு யுத்தம் மூலம் தீர்வு காணமுடியாது என்பதை பத்து ஆண்டுகள் போராடிய பின்னரே தென்பகுதி மக்கள் உணரத் தலைப்பட்டுள்ளனர்.

யுத்தம் வேண்டாம்; அரசியல் தீர்வைப் பெற்றுத் தாருங்கள் என்று அரசிடம் இப்போது தென்பகுதி மக்கள் கோருகின்றனர்.

—இவ்வாறு குறிப்பிட்டார் பிரபல சிங்கள அரசியல் ஆய்வாளர் றோஹான் குணரத்ன.

வடக்கு—கிழக்கு யுத்தம்மற்றும் இனப்பிரச்சினை குறித்து புத்தகங்கள் எழுதியுள்ள அவர் பி. பி. ஸி. சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியிலேயே இப்படிக் கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

(4 ஆம் பக்கம் பார்க்க)

### ஸ்ரீலங்கா படையினரின் வன்முறைகளினால் 312 அப்பாவித் தமிழர்கள் கடந்த வருடம் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 3

கடந்த 1993 ஆம் ஆண்டில் தமிழீழப் பகுதிகளில் படையினர் மேற்கொண்ட வன்முறைச் சம்பவங்களில் 312க்கு மேற்பட்ட அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டனர் என்று புலிகளின் [illegible] தியில் தெரிவிக்கப்பட்டது.

விமானப் படையினர் நடத்திய குண்டு வீச்சுக்கள், மற்றும் கிளாலி கடற் பகுதியில் இடம் பெற்ற படுகொலைச் சம்பவங்கள் ஆகியவற்றிலேயே அதிக எண்ணிக்கையான மக்கள் உயிரிழந் [illegible] பட்டது.

தென் தமிழீழப் பகுதிகளில் தமிழர்கள் பலர் படையினரால் படுகொலை செய்யப்பட்டுள்ள போதிலும் அது தொடர்பான விவரங்கள் எதுவும் வெளிவராமல் போய் விட்டன என்றும் — புலிகளின் [illegible] செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-5)

### படையினர் சோதனையால் வாதுவ வருவதில் தாமதம்

யாழ்ப்பாணம், ஜன. 3

கொழும்பில் தரித்து நிற்கும் 'வாதுவ' கப்பலில் பொருள்கள் ஏற்றும் வேலைகள் மந்தகதியில் நடைபெறுவதாக அங்கிருந்துகிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

கப்பலில் ஏற்றப்படும் பொருள்களை படையினர் அக்குவேறு ஆணிவேறாக சோதனை செய்வதாலேயே பொருள்கள் ஏற்றும் வேலை மெதுவாக நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடற்படையினருடன் பொலிஸ், இராணுவ அதிகாரிகளும் இணைந்து சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

### கிழக்கு உள்ளூராட்சி தேர்தல்: வேட்பாளர் பட்டியலை ஐ. தே. க. தயாரிக்கிறது

கொழும்பு, ஜன. 3

கிழக்கு மாகாணத்திலும், வவுனியாவிலும் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களில் போட்டியிடுவதற்கான வேட்பாளர் பட்டியலை ஐ.தே.க. தயாரித்து வருகிறது.

சுதந்திரக் கட்சி தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் வேட்பாளர் பட்டியலைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த தேர்தல்களில் முஸ்லிம் காங்கிரஸும் வேட்பாளர்களை நிறுத்தவிருக்கிறது (ஒ-3)

### பத்திரிகையில் அரச செலவில் அநுபந்தம் வெளியிட தடை

கொழும்பு, ஜன 3

அரசாங்கச் செலவில்— அரசியல் நோக்கங்களை அடைவதற்காகப் பிரசுரிக்கப்படும்— பத்திரிகை அநுபந்தங்கள், விளம்பரங்கள் என்பன வெளியிடப்படுவதைத் தடைசெய்வதற்கு ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா நடவடிக்கை எடுத்துள்ளார்.

இது தொடர்பான உத்தரவை ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் அவரின் செயலாளர் சகல திணைக்களங்களின் தலைவர்களுக்கும் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

அரசியல் கட்சிகளினதும், தனிநபர்களினதும் அந்தஸ்தை உயர்த்துவதற்கென மிகத் தீவிர ஆர்வம் கொண்ட அரச நிறுவனங்களின் தலைவர்கள் பொதுப் பணத்தை செலவிட்டு வருவது தெரியவந்துள்ளதாகவும்—

மேற்குறிப்பிட்ட விளம்பரங்களையோ, அநுபந்தங்களையோ வெளியிட வேண்டாம் என்றும் அந்தக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-5)

### அபிவிருத்தி திட்டங்களை தொடர யுனிசெப் முடிவு

யாழ்ப்பாணம், ஜன. 3

யாழ். மாநகரசபைப் பகுதியில் தமது அபிவிருத்தித் திட்டங்களை தொடர்ந்து மேற்கொள்ள "யுனிசெப்" முடிவு செய்துள்ளது.

கடந்த மாதம் யாழ்ப்பாணம் வந்திருந்த யுனிசெப் அதிகாரிகளின் சிபார்சை ஏற்றுக் கொண்டு, தொடர்ந்து அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள யுனிசெப் தலைமையகம் முடிவு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்ட வேலைகளுக்கு 5 லட்சம் ரூபாவை மேற்படி அமைப்பு வழங்கியுள்ளது.

இதே வேளை குடிதண்ணீர் விநியோகம் தொடர்பாக

(4 ஆம் பக்கம் பார்க்க)

### இன்றும் நாளையும் படகுச் சேவை

யாழ்ப்பாணம், ஜன. 3

கிளாலி பூநகரிப் படகுச் சேவை இன்றும், நாளையும் வழமையான நேரத்தில் நடைபெறும் என விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (ஒ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Chaly உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க: இல. 732, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (28724)

இரண்டு மாதங்கள் நிரம்பிய பொமனேரியன் ஆண் நாய்க் குட்டிகளும், இரண்டு மொஸ்கோ வைட் ஆண் தாராக்களும் விற்பனைக்குண்டு. இல. 9, பிளைச்சர் ஒழுங்கை, (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அருகில்) சுண்டிக்குளி. (28737)

தமிழீழ, அரசாங்க, விடுமுறை நாட்கள் அடங்கிய படக் கலண்டர்கள் ரூபா 6/-க்கு எம்மிடம் விலாசம் பதிப்பித்து பெற்றுக்கொள்ளலாம். மற்றும் பெரிய நடுத்தர கலண்டர்களுக்கும் ஸ்ரீலங்கா அச்சகம், ராஜா தியேட்டர் அருகில், ஸ்ரீகாந்தா அச்சக லேன், யாழ்ப்பாணம். (28628)

### தவறிவிட்டது

வைத்தியநாதன் ஸ்ரீதரனின் 224632 இலக்க சாரதி லைசென்ஸும், 690950642 V இலக்க அடையாள அட்டையும் பேர்ஸுடன் கோண்டாவிலில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மருந்து, பால்மா விற்பனை நிலையம், இல. 148, ஆஸ்பத்திரி வீதி முன்பாக, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (28726)

---

வெளிவந்துவிட்டது!

வரதர் கதைமலர் -4

**வேப்ப மரத்தடி பேய்!**

எழுதியவர்!
சி. சிவதாசன்

விலை: ரூபா **12/-**

(சி/6860)

---

**புதிய கல்வி நிலையம்**

219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

கல்வியாண்டு **1994**

ஆண்டு 3 முதல் ஆண்டு 9 வரைக்கான புதிய வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

**06 — 01 — 1994**
பி. ப. 3-00 மணி
(பயிற்சிப் பரீட்சைகளுடன்)

அனுமதியை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

(28733)

---

பட்டப்பின் கல்வித் தகைமை — கற்கைநெறி 1992/93

பட்டப்பின் கல்வித் தகைமைக் கற்கை நெறிக்கான விரிவுரைகள் முழுநேர மாணவர்களுக்கு 1994-01-17 ஆம் திகதி காலை 9-00 மணிக்கும், பகுதிநேர மாணவர்களுக்கு 1994-01-22 ஆம் திகதி காலை 9-00 மணிக்கும் ஆரம்பமாகும்.

கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட முழுநேர மாணவர்கள் 1994-01-20 ஆம் திகதிக்கு முன் கல்விக்கிளையில் பதிவு செய்து விரிவுரைகளுக்குச் சமுகமளிக்கவும். இவர்களின் பெயர்ப் பட்டியல் ஒன்று பல்கலைக்கழக அறிவித்தல் பலகையில் போடப்பட்டுள்ளது.

— பதிவாளர்.

யாழ். பல்கலைக்கழகம்,
1993-12-30.

[சி-6798]

---

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

### கல்வியாண்டு - 1994

O/L EVENING CLASSES (3-15 — 6-00)
SAT., SUN. CLASSES (8-00 — 1-00)

**ஆண்டு 10, 9, 8, 7, 6**

ஆரம்பம்: **06 — 01 — 1994**
(வியாழன்) மாலை 3-15 மணி

★ அனுமதிகளை முன்கூட்டியே பதிவு செய்யவும்.

(சி-6864)

---

## யூனிவேர்சல்

கந்தர்மடம்
யாழ்ப்பாணம்

**புதிய வகுப்புகள் ஆரம்பம்**

**09-01-1994 காலை 7.30 மணி**

✲ 05 - 01 - 94இற்கு முன்னர் அனுமதிகளைப் பெற்றுககொள்ளவும்.

- அதிபர்

(சி-6877)

---

## அட்டியல் தவறிவிட்டது

**01 — 01 — 1994** காலை யாழ். பெரிய கோயிலுக்கும் ஆனைக்கோட்டை, உயரப்புலத்துக்கும் இடையில் வெள்ளைக் கல் பதித்த 3¼ பவுண் தங்க அட்டியல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பின்வரும் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**திருமதி தேவதாஸ்,**
உயரப்புலம், ஆனைக்கோட்டை.

(28734)

---

## வெளிவந்து விட்டது

ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின் மீளபார்வையுடன் கூடிய

**ஆண்டு 9 சைவநெறி**
வெளிவந்து விட்டது

ஆக்கம்: க. சந்திரசேகரம்

வெளியீடு: சோதி புத்தகசாலை
கச்சாய் வீதி (மக்கள் கடை அருகில்),
சாவகச்சேரி.

ஏக விநியோகஸ்தர்கள்:
ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை,
235, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/6904)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்: 10 — 01 — 1933



ஆண்டவன் அடியில்: 03 — 12 — 1993

**சின்னப்பு திருநாவுக்கரசு**
(ஓய்வுபெற்ற லிகிதர், திருமலை துறைமுகக் கூட்டுத்தாபனம்)

பண்போடும், பாசத்தோடும் எம்மை வளர்த்து ஆளாக்கிவிட்ட எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கிற்கு எங்கள் கண்ணீர் அஞ்சலி!

அன்னாரின் ஆத்மசாந்திக்கு இறைவனை வேண்டுகின்றோம்.

அன்னாரின் மறைவின்போது எமது துயரில் பங்கேற்றோருக்கும், பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் எமது நன்றி அறிதலை தெரிவித்துக் கொள்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(6884)

---

**NEW 'A' LEVEL CENTRE**

STATION ROAD,
JAFFNA.

ஆண்டு 11, 10, 9
வகுப்புகள்
ஆரம்பம்:

**07 - 01 - 1994**

★ யாழ். நகர் பிரபல ஆசிரியர் குழு

அனுமதிகள் அன்று 3-00 பிற்பகல் வழங்கப்படும். (சி-6882)

---

### வகுப்புகள் ஆரம்பமாகா

யாழ்ப்பாணம், ஜன. 3

அண்மையில் இடம்பெற்ற குண்டுவீச்சினால் சேதமடைந்த கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா மகளிர் வித்தியாலய மாணவர்களுக்கு 1994 ஆம் ஆண்டுக்கான வகுப்புகள் இன்று திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படமாட்டா என்று அறிவிக்கப்படுகின்றது.

முதலாம் தவணை ஆரம்பமாவது தாமதமாகும் என்று தெரிவிக்கப்பட்டது.

(த)

---

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

✲ செல்வன் சி சோபிதன் ✲

தெல்லிப்பழை, பன்னாலையைச் சேர்ந்த நடராசா சிவகுமாரதாஸ் கோப்பாய் தெற்கு கலாமதி தம்பதிகளின் செல்வப்புதல்வன் 'சோபிதன்' தனது முதலாவது பிறந்தநாளை (03-01-1994) இன்று ஆஸ்திரேலியா சிட்னி நகரில் உள்ள தமது இல்லத்தில் வெகுசிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அதே இடத்தைச் சேர்ந்த டடி, மம்மி, பெரியப்பாமார், பெரியம்மாமார், அண்ணாமார், மது அக்கா, கோப்பாய் பாட்டாமார், பாட்டிமார், சித்தப்பாமார், நஞ்சி அத்தை, யோகா சித்தி, அருள் சித்தி, பாப்பா மாமா மற்றும் மாமாக்கள் பகவான் ''ஸ்ரீ சத்யசாயி பகவான்'' அருள் ஆசி பெற்று, பல் கலைகளையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

— சித்திமார்.

செல்வி இ அருள்மதி,
''சிவமதி வீதி''
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(28718)

---

## வாழ்த்துகிறோம்

கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் 1993ஆம் ஆண்டுக்குரிய ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 178 புள்ளிகளைப் பெற்று சாதனை புரிந்த செல்வி தாட்சாயினி சிவதாஸன் மற்றும் அப்பரீட்சையில் சித்தியடைந்த வி. நர்மியா, ச. சுகந்தா, அ. நிரஞ்சினி, ப. சயந்தன் ஆகியோரை வாழ்த்துகிறோம்.

குறிப்பு:

எமது பாடசாலையின் பழைய மாணவரும் யாழ். மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபருமாகிய திரு. வே. பாலசுந்தரம் அவர்கள் தமது பெற்றோர்கள் ஞாபகார்த்தமாக வழங்கும் நினைவுக் கேடயமும் பரிசிலும் செல்வி சி. தாட்சாயினிக்கு வழங்கப்படவுள்ளன.

பாடசாலை அபிவிருத்திச் சபை,
கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்.

[சி-6907]

---

## உடுவில் மகளிர் கல்லூரி
## பட்டப்படிப்புகள் பிரிவு

### G. A. Q. - 95 போதனை

ஆரம்பம்:- **05 - 01 - 1994**
புதன் — 3 மணி

| | |
|---|---|
| பொருளியல் | — திரு. S. வரதராஜன் B A (Hons) |
| மெய்யியல் | — திரு. S. S. மனோகரன் B. Com |
| தமிழ் | — திரு. S. கணேசலிங்கம் B. A. (Hons) |
| இந்து நாகரிகம் | — திரு. K. பவசிங்கம் B. A. (Hons) |
| அரசியல் | — திரு. K. செல்வரட்ணம் B. A, (Hons) |

மேலதிக விவரங்களுக்கு:
பட்டப்படிப்புகள் பிரிவு,
உடுவில் மகளிர் கல்லூரி.

(சி-6903)

---

## திரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட, கோண்டாவில்.

### கல்வியாண்டு 1994

ஆண்டு 4 முதல் ஆண்டு 11 வரையிலான வகுப்புக்கள் ஆரம்பம் **05 — 01 — 1994**

| | |
|---|---|
| விஞ்ஞானம் | கணிதம் |
| இரா. செல்வவடிவேல், சண் | இந்திரன், லோகேஸ்வரன், வாமதேவன், மகேந்திரன் |
| தமிழ்/சமயம் | சமூகக்கல்வி |
| பண்டிதர், சுந்தரலிங்கம், யோகராணி | வேலா, சிவனேசன் |
| ஆங்கிலம் | வர்த்தகம் |
| மகாலிங்கம், தர்மலிங்கம் ரமேஸ் | நவம் |

அனுமதிகளை முன்கூட்டியே பதிவு செய்யவும்.

(சி/6853)

---

## பரி. பேதுரு பாலர் பாடசாலை

றிம்மர் மண்டபம்- யாழ்ப்பாணம்

விண்ணப்பப் படிவங்களை தை மாதம் 10ஆம் திகதி 1994இல் பரி. பேதுரு பாலர் பாடசாலை காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். 1989 ஆம் ஆண்டிற்குப் பிறகு பிறந்த சிறுவர் விண்ணப்பிக்கலாம்.

(28746)

---

## தேவை

1 அச்சகம் ஒன்றிற்கு ஒப்புநோக்குநர்,
2 பிரபல மாதாந்த சஞ்சிகைக்கு ஆசிரியராகக் கடமையாற்றக் கூடியவர்.

ஆங்கில அறிவுடையவர்களாக இருத்தல் வேண்டும். அனுபவ ரீதியான சான்றிதழ்களுடன் இன்று **03 — 01 — 1994** ஆம் திகதி காலை 10-30 மணிக்கு சமுகம் தரவேண்டிய முகவரி:

**சாளரம்,**
வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

(28740)

---

ஜனவரி **9** ஞாயிறு (மாலை 3மணி)

புதிய பிரிவுகள் ஆரம்பம்

**O/L (ஆண்டு 11)**

ஆண்டுகள் **10, 9**

★ உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி
யாழ்ப்பாணம்.

[சி-6908]

---

## ஐடியல் கல்வி நிலையம்

ஆஸ்பத்திரி ஒழுங்கை, மானிப்பாய். பிரப்பங்குளம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

**ஆண்டு 4 முதல் 11 வரை**

சகல வகுப்புகளும் ஆரம்பம்:

**05 — 01 — 1994**
மாலை 4 மணி

குறிப்பு:- குறித்த தொகை மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர்.

(28738)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

**அமரர் L. R. முத்தையா**
(யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்ப, விவசாய நிறுவன இயக்குனர்சபைத் தலைவர்)

பிறப்பு: 03—12—1925
மகிமைக்குள் பிரவேசித்தல்: 03—12—1993

என்றும் எம் நெஞ்சங்களை விட்டகலாத எமது அன்புத் தலைவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இயக்குனர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்.

யாழ்ப்பாணக் கல்லூரி-
தொழில் நுட்ப நிறுவனம்,
வட்டுக்கோட்டை,
யாழ்ப்பாணம்.

(28726)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

**அமரர் மேரிஆன் யோகரஞ்சினி புவிராஜசிங்கம்**

மலர்வு: 24 — 06 — 1964
உதிர்வு: 04 — 12 — 1993

எமது சக மாணவன் பிரபாகர் அவர்களின் அருமைத் தாயாரின் இழப்பினால் ஏற்பட்ட துயரத்தில் நாமும் பங்குகொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

1994 வர்த்தகப் பிரிவு மாணவர்கள்,
புனித பத்திரிசியார் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

[28741]

---

மீண்டும் **சித்ராலயாவில் போட்டோஸ்ரற்**

(சி-6884)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
192/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## சாடிக்கு ஏற்ற மூடியாகும் முயற்சி

ஸ்ரீலங்கா இராணுவத்தின் புதிய தளபதியாக, பதின்மூன்றாவது தளபதியாகப் பொறுப்பேற்ற லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டி சில்வா, வடக்கு - கிழக்கில் நடக்கும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரச் செயற்படப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்காவின் தலைவிதியை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் ஒரு பதவியைப் பொறுப்பேற்கும் அவர், அவ்வாறு தான் கூறியாக வேண்டும். யுத்தம் வேண்டாம் என்றோ, யுத்தத்தில் வெல்ல முடியாது என்றோ அல்லது முடிவுக்குக் கொண்டுவர இயலாது என்றோ கூறமுடியாது. நாத்தடுமாறியேனும் அவ்வாறு சொன்னால் அவர் தளபதி பதவிக்குப் பொருத்தமில்லாதவராக ஆகிவிடுவார். உடனடியாகவே வீட்டுக்கு அனுப்பப்பட்டு விடுவார். சில வேளைகளில் சிறைக்குக் கூட மாற்றப்படலாம்.

அதனால் தான், அவர், ஏனையோர் இதுவரை கூறியவற்றைச் சற்று மெருகேற்றி, ஆகக்கூடிய இராணுவ பலத்தைப் பயன்படுத்தி யுத்தத்தை விரைவில் முடிவுக்குக் கொண்டுவரப் போவதாகத் தெரிவித்திருக்கிறார்!

தமக்கு முன்னர் இருந்த சிசில் வைத்தியரத்னாவும், ஹமில்டன் வனசிங்காவும் பாடிய அதே பல்லவியையே இவரும் மீட்டிசைத்து உள்ளார்!

யுத்தத்தில் வெல்வதற்கு, விடுதலைப் புலிகளை வென்று போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு, இராணுவம் எதிர்நோக்கும் பிரதான முட்டுக்கட்டை மனித சக்தி வளமே என்று புதிய தளபதி கூறுகிறார்.

தரைப் படையினரின் ஆற்றலை விருத்தி செய்வதற்கு அதனூடு யுத்தத்தில், வெற்றி பெறுவதற்கு, நவீன இராணுவத் தளபாடங்கள் மற்றும் சாதனங்கள், வாகனங்கள் என்பனவும் முக்கிய தேவைகளாக இருப்பதாகவும் அவர் தெரிவிக்கிறார்.

படையினருக்குப் போதிய பயிற்சி அளித்தல், இராணுவத் தலைமைப்பீடத்தை மறுசீரமைத்தல் ஆகிய நடவடிக்கைகளுக்கும் முன்னுரிமை வழங்கப்போவதாகவும் ஜெரி டி சில்வா கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளை வெல்ல முடியாமைக்கும், போரை முடிவுக்குக் கொண்டு வர இயலாமைக்கும், ஸ்ரீலங்கா இராணுவத்தின் தலைமைப்பீடத் தரப்பில் மேலே கூறப்பட்ட மூன்று காரணங்களுமே இதற்கு முன்னரும் — கடந்த மூன்றரை வருட காலமாக — அடிக்கடி கூறப்பட்டு வந்துள்ளன. விடுதலைப் புலிகளின் கைகளில் தோல்வி அடைந்த போதெல்லாம் இந்த மூன்று காரணங்களுமே முன்வைக்கப்பட்டு வந்தன.

அந்த வகையில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் ஆட்பலம் மட்டும் இப்போது 90,000 ஆக உள்ளது. அதே போல கோடானு கோடி ரூபா பணச் செலவில் நவீன ஆயுதத் தளபாடங்களும் வாங்கிக் குவிக்கப்பட்டுள்ளன. இராணுவத் தலைமைப்பீடம் மற்றும் கட்டமைப்பில் அடிக்கடி மாற்றங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

இவற்றின் மத்தியில் தான் கட்டைக்காடு, மண்கிண்டி மலை, பூநகரி ஆகிய இடங்கள் உட்பட பல மிகப்பெரும் வெற்றித் தாக்குதல்களை புலிகள் நடத்தினார்கள்.

இப்போதுள்ளதற்கு மேலதிகமாக ஆயுதங்களும், ஆளணியும் தேவை என்று புதிய தளபதி கோருவது வடக்கு-கிழக்கை மேலும் இராணுவ மயமாக்குவதற்கும், யுத்தத்திற்கான செலவினத்தைப் பெருக்குவதற்குமே. அவற்றினால் விடுதலைப் புலிகளை வென்றுவிட முடியாது.

நிலைமை இவ்வாறிருக்க, ஆகக்கூடிய இராணுவ பலத்தைப் பயன்படுத்தி யுத்தத்துக்கு முடிவு காணப் போவதாக ஜெரி கூறுவது ஹமில்டன், சிசில் ஆகிய இருவராலும் இயலாததைத் தன்னால் சாதிக்க முடியும் என்பதனை உணர்த்தி அரசியல் தலைமைத்துவத்தை ஜனாதிபதி விஜேதுங்காவை திருப்திப்படுத்துவதற்காகவே! பதவி உயர்வுக்கு கைம்மாறு செய்வதற்கே!

ஆரம்பத்திலேயே அரசியல் தலைமைத்துவத்துக்குப் பந்தம் பிடித்து, சாடிக்கு ஏற்ற மூடியாக விளங்குவதற்கான முதல் முயற்சி இது!

# விஞ்ஞானபாட செயல்முறை கற்பித்தலுக்கு அதிக கவனம்

## புதிய தவணையிலிருந்து ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 3

உயர்தர வகுப்புக்களில் விஞ்ஞான பாடங்களில் செயல்முறைக் கற்பித்தலில் அதிக கவனம் செலுத்தப்படல் வேண்டும். இது புதிய தவணையிலிருந்து சகல பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்தப்படும்.

இவ்வாறு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் கடந்த வாரம் பௌதிக ஆசிரியர்களுக்கான இரண்டு நாள் சேவைக் கால பயிற்சி வகுப்பில் தகவல் தெரிவிக்கப்பட்டது.

பயிற்சி வகுப்பை ஆரம்பித்து வைத்து பேசிய யாழ்ப்பாண தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் செல்வி ரி. பெரியதம்பியும், பயிற்சி நிறைவு விழாவில் பேசிய யாழ்ப்பாண வடக்கு வலய கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். கந்தசாமியும், செயல்முறை கற்பித்தலின் அவசியத்தை வலியுறுத்தினார்கள்.

முதலாம் தவணையில் தங்களின் முதற்பணி இது எனவும், இதற்கு சகல ஆசிரியர்களின் ஒத்துழைப்பு அவசியம் என்றும், இதற்கு முன்னோடியாக ஆய்வுகூட உதவியாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளதாகவும், திரு. கந்தசாமி தெரிவித்தார்.

மேற்படி பயிற்சிக் கருத்தரங்கின் அமைப்பாளராக விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் செயற்பட்டார்.

இதேவேளை யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளில் உயர்தர வகுப்புக்களில் பௌதிகவியல் பாடத்தை கற்பிக்கும் ஆசிரியர்களை உள்ளடக்கிய உயர் பௌதிகவியல் ஆசிரியர் சங்கம் ஒன்றும் பயிற்சிக் கருத்தரங்கின் இறுதியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

பௌதிக பாட ஆசிரியர்களிடையே பாட ரீதியான தொடர்பை ஏற்படுத்தி அவர்களின் திறனை விருத்தி செய்வதே இச்சங்கம் அமைக்கப்பட்டதன் நோக்கமாகும்.

சங்கத்தின் இயக்குனராக வேலணை மத்தியகல்லூரி ஆசிரியர் திரு. கனகநாயகம் தெரிவாகியுள்ளார்.

சங்கத்தின் முதலாவது அமர்வு இம்மாதம் 27 ஆம் திகதி வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற உள்ளது. (அ 31)

## கிரனேட்டை வெடித்து தற்கொலை செய்த சிப்பாய்!

### பொலீஸார் விசாரணை

கொழும்பு, ஜன 3

அனுராதபுரத்தில் தனது காதலியுடன் தற்கொலை செய்துகொண்ட விமானப் படைச் சிப்பாய்க்கு கிரனேட் குண்டு எப்படிக் கிடைத்தது என்பது குறித்து பொலீஸார் விசாரித்து வருகின்றனர்.

21 வயதான ரம்யா மங்கலிக்கா குமாரிகளுவில என்பவரைக் கட்டிப்பிடித்த வண்ணம் கிரனேட் ஒன்றை வெடிக்க வைத்து அந்த விமானப்படைச் சிப்பாய் தற்கொலை செய்துகொண்டார். அப்போது காதலியும் உயிரிழந்தார்.

இச்சம்பவம் கடந்த 28ஆம் திகதி இடம்பெற்றது. (த-எ)

## மகாஜனாக் கல்லூரி தனியாக இயங்கும்?

வலிகாமம் தெற்கு, ஜன. 3

இணுவில் மத்திய கல்லூரியில் மாலை நேரப் பாடசாலையாக இயங்கி வரும் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியை இம்மாத நடுப்பகுதியில் இருந்து தனியாக வேறு ஓர் இடத்தில் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மருதனார்மடம் கல்விக் கோட்ட அலுவலகத்துக்கு எதிர்ப்புறமாக அமைந்துள்ள கட்டடத்தில் கல்லூரியை இயங்க வைக்க உத்தேசிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த-5 152)

### தென்மராட்சியில்

## வெள்ள அகதிகள் தங்கியுள்ள பாடசாலைகள் இயங்கா

தென்மராட்சி, ஜன 3

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியுள்ள தென்மராட்சி கல்வி கோட்டப் பாடசாலைகள் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டிருக்குமென்று தெரிவிக்கப்பட்டது.

கொடிகாமம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம், கச்சாய் அ. த. க. பாடசாலை, மந்துவில் அ. த. க. பாடசாலை ஆகிய பாடசாலைகளில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியுள்ளனர்.

தென்மராட்சிப் பகுதியில் பல பாடசாலைகளில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியுள்ளனர் என்பதும் பல பாடசாலை வகுப்பறைகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (த-117)

## யுத்தம் தொடர்ந்தால் அழிவுகள் அதிகரிக்கும்

### காமினி சொல்கிறார்

கொழும்பு, ஜன. 3

தற்போது இடம்பெற்று வரும் இந்த யுத்தத்தினால் நூற்றுக்கணக்கான கோடி ரூபா பணமும், பெருமளவு சொத்துக்களும், உயிர்களும் இழக்கப்பட்டுள்ளன. யுத்தம் தொடர்ந்து கொண்டிருப்பதால் இந்த அழிவுகள் இன்னும் அதிகரிக்கும் நிலை ஏற்படும்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் காமினி திஸநாயக்கா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா காலத்தில் இங்கு வருகை தந்திருந்த ஐரோப்பிய நாடுகளின் சங்கம் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வுகாண முடியும் என்றும், யுத்தத்தின் மூலம் தீர்வு ஒன்றை எட்ட முடியாது என்றும் கூறியிருந்தனர்.

ஆனால் அவர் அதைக் கருத்தில் எடுக்கவில்லை. இனப்பிரச்சினை தீர்வுக்கென நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவும், அதன் தலைவரும் இதைத் தீர்க்க தவறி விட்டனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுக்களில் கலந்து கொள்ளாது ஒதுங்கிக் கொள்கிறது.

தற்போதைய ஜனாதிபதியும் யுத்தத்தையே விரும்புகிறார்.

வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை நடத்தி தீர்வுகாணப்படுவதற்கு இடையில் அரைவாசி நாடு அழிந்துவிடும் என்று கூறினார். (த-3)

## அன்னை சாரதாதேவி பிறந்ததின விழா

தூய அன்னை ஸ்ரீசாரதா தேவியின் 141 ஆவது பிறந்த தின பெருவிழாவும், சுவாமி விவேகானந்த சிக்காகோ நூற்றாண்டு ஞாபகார்த்த மண்டப அடிக்கல் நாட்டு விழாவும் நாளை செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதாசேவாச்சிரமத்திலும், பொலிகண்டி கந்தவனக் கிளையிலும் நடைபெறும்.

இதேவேளை – நாளை செவ்வாய்க் கிழமை திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்திலும் அன்னை ஸ்ரீசாரதாதேவியின் பிறந்த தினவிழா கொண்டாடப்படும். (த)

## இலவச பாட நூல்கள்

1994ஆம் ஆண்டுக்குத் தேவையான இலவசப் பாடப் புத்தகங்கள் யாவும் நாட்டின் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன.

யாழ்ப்பாணப் பாடசாலைகளுக்கான புத்தகங்கள் செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் அனுப்பப்பட்டுள்ளன.

கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் இவ்வாறு தெரிவித்தார். (க)

## சுவர் இடிந்து மூவர் காயம்

கந்தரோடையில் வீட்டுச் சுவர் இடிந்து வீழ்ந்ததில், நித்திரையில் இருந்த அக்கா-தம்பி, மூவர் காயமடைந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை நடந்தஇச்சம்பவத்தில் செல்வராசா செல்வமலர் (14வயது), அவரது சகோதரரான செல்வரஞ்சன் (10 வயது), சகோதரியான செல்வரஞ்சிதம் (10 வயது) ஆகியோர் காயமுற்றனர் இவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (உ-3)

## தெல்லிப்பளை ஆஸ்பத்திரியில் ஒரு லட்சம் பேருக்குச் சிகிச்சை

மானிப்பாயில் இயங்கி வரும் தெல்லிப்பளை மாவட்ட அரசினர் வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவில் கடந்த ஆண்டில் ஒரு லட்சத்து 12 ஆயிரத்து 326 பேருக்கு சிகிச்சையளிக்கப் பட்டது.

இவர்களில் காய்ச்சல் நோயினால் பீடிக்கப்பட்ட 6 ஆயிரத்து 916 பேருக்கு இரத்தப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டபோது ஆயிரத்து 569 பேருக்கு மலேரியா நோய் தொற்றியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டு அதற்கான சிகிச்சைகள் வழங்கப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (த 135)

# வலி-தெற்கு பிரதேச சபை வேலைகளுக்கு ரூ. 10லட்சம்

வலிகாமம் தெற்கு, ஜன 03

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் 1994 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான வேலைகளுக்கென பத்துலட்சம் ரூபாவை வடக்கு கிழக்கு மாகாண பிரதேச சபையினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இப்பணம் சம்பந்தமான செலவிடுகள் பற்றி வலிகாமம் தெற்கு பிரதேச திட்டமிடல் குழுவினரால் ஆராயப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு மாவட்ட இணைப்புக்குழுவின் அங்கீகாரத்துக்கென அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

1994 ஆம் ஆண்டு பின்வரும் செலவுகளுக்காக குறிப்பிட்ட நிதி ஒதுக்கீடு, பங்கீடு செய்யப்பட்டுள்ளதாக வலிகாமம் தெற்கு பிரதேச திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திரு. க. தர்மராசா தெரிவித்துள்ளார்.

வீதிகள் திருத்தம் 33 ஆயிரம் ரூபா, [illegible] ஆயிரம் ரூபா, சுகாதார வசதிகள் 137 ஆயிரம் ரூபா, ஆயுள்வேத வைத்திய வசதிகளுக்காகவும், போசாக்குணவு வழங்கவும் 75 ஆயிரம் ரூபா, விவசாயம் தொடர்பான நடவடிக்கைகளுக்கு 75 ஆயிரம் ரூபா, நீர்ப்பாசன குளங்கள் புனரமைப்புக்கு- 90 ஆயிரம் ரூபா மற்றும் — தென்னை நாற்றுக்களுக் [illegible] கும் என 75 ஆயிரம் ரூபா— குடிநீர் விநியோகத்துக்கு 200 ஆயிரம் ரூபா. (த-152)

## அழுகிய தவளை அடங்கிய கசிப்பு கோடாக்கலவை

### நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது

வலிகாமம் தெற்கு, ஜன. 3

அழுகிய நிலையில் காணப்பட்ட தவளைகள் மற்றும் ஓணான்கள் அடங்கிய- கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்துப்— கோடாக்கலவை வழக்கு ஒன்றின்போது நீதியாளரின் பார்வைக்காக சுன்னாகம் மாவட்ட நீதிமன்றில் அண்மையில் சமர்ப்பிக்கப்பட்டது.

கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தும் 210 லீற்றர் கோடாக் கலவையை சங்கானை காவல்துறையினர் அண்மையில் கைப்பற்றியிருந்தனர்.

இது தொடர்பான வழக்கு அண்மையில் சுன்னாகம் மாவட்ட நீதிமன்றில் ஆரம்பமானபோது மேற்படி கோடாக்கலவை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட மானிப்பாயைச் சேர்ந்த வேலாயுதம் பாலகிருஷ்ணன், இராசன் நடராசா ஆகிய இருவரும் நீதியாளர் முன் ஆஜர் செய்யப்பட்டனர்.

துர்நாற்றம் வீசிய கலவையை நீதியாளர்களும் பொதுமக்களும் பார்வையிட்டனர்.

அதனை அடுத்து நீதியாளர் செல்வி எழில்மதி குற்றவாளிகள் இருவருக்கும் தலா 40 ஆயிரம் ரூபா வீதம் 80 ஆயிரம் ரூபாவை அபராதமாக விதித்தார். அபராதம் செலுத்தத் தவறும் பட்சத்தில் 1 வருட சிறைத்தண்டனைக்கு உத்தரவிட்டார். (த-152)

## இந்திய ராணுவத்திலிருந்து கல்கத் ஓய்வு பெற்றார்

இலங்கை-வடக்கு -கிழக்குப் பகுதிகளில் இந்திய அமைதிப் படையின் தளபதியாகப் பணியாற்றிய லெப்டினன்ட் ஜெனரல் ஏ. எஸ். கல்கத் நேற்று முன்தினம் இந்திய இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்றார் என்று அறிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான பிரியாவிடை நிகழ்ச்சி பூனேயில் இடம்பெற்றது (த-எ)

### யாழ். ஆஸ்பத்திரியில்

## 80 சிற்றூழியர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 3

யாழ். போதனா வைத்தியசாலையில் தற்காலிகமாகக் கடமையாற்றும் 80 அமைய சிற்றூழியர்களை நிரந்தரமாக்குவதற்கான நடவடிக்கைகளை வைத்தியசாலை நிர்வாகம் மேற்கொண்டுள்ளது.

மேற்படி விடயம் தொடர்பாக சுகாதார மகளிர் விவகார அமைச்சுடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஊழியர்கள் நிரந்தரமாக்கப்பட்ட பின்னரே அவர்களுக்கான சீருடைத் துணிகள் வழங்கப்படும் என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (த-17)

## தென்மராட்சியில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாலம் சேதம்

தென்மராட்சி, ஜன, 03

தென்மராட்சிப் பகுதியில் புதுக்காட்டிலிருந்து மருதங்கேணிக்குச் செல்லும் வழியில் உள்ள பாலம் வெள்ளத்தினால் மோசமாக சேதமடைந்துள்ளது.

இந்திய இராணுவம் இப்பகுதியில் இருந்த வேளையில் இப்பாலம் தகர்க்கப்பட்டு பின்னர் தற்காலிகமாக திருத்தம் செய்யப்பட்டது.

ஆனால் தற்போது பாலத்தில் வெள்ளம் பாய்ந்து கொண்டிருப்பதால் தற்காலிகமாக போடப்பட்டுள்ள கட்டைகள் எந்நேரமும் வெள்ளத்தில் இழுபட்டுச் செல்லும் அபாய நிலை தோன்றியுள்ளது.

இதேவேளை— இப்பாலத்தை அண்டியுள்ள வீதியும் வெள்ளத்தினால் குன்றும் குழியுமாக காட்சியளிப்பதால் பாதசாரிகள் கால் நடையாக கூட செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இப் பாலம் வெள்ளத்தில் முற்றாக சேதமடைந்தால் இவ்வீதியில் போக்குவரத்து முற்றாக தடைப்படலாம் என அஞ்சப்படுகிறது .(த-117)

## மரக்கறி விலை

யாழ்ப்பாணம், ஜன. 3

வழமை போல் இந்த மாதத்தில் ஜனவரியில் மரக்கறி வகைகள் விலை வீழ்ச்சி ஏற்படாது எனத் தெரிய வருகிறது. கடந்த டிசம்பர் மாதத்தில் பெய்த கடும் மழையினால் மரக்கறிப் பயிர்கள் பலவும் அழிந்துள்ளமையே இதற்கான காரணமென யாழ். மாவட்ட விவசாய உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

பெப்ரவரி, மார்ச் மாதம் அளவிலேயே மரக்கறி வகைகளின் விலையில் வீழ்ச்சி ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார். [த-162]

## செய்திக் கொத்து

### நன்கொடை

தென்மராட்சி, ஜன 3

மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலய அடியார்கள் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தின் அபிவிருத்திக்கென மூவாயிரம் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளனர். (க-117)

### பொதுச் சந்தை

தாளையடி, ஜன. 3

செம்பியன்பற்று வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் பொதுச் சந்தை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

சுமார் 60 ஆயிரம் ரூபா செலவில் இச்சந்தை அமைக்கப்பட்டுள்ளது. (ஒ-144)

### கோழிகளுக்கு தடுப்பூசி

சண்டிலிப்பாய், ஜன. 03

சண்டிலிப்பாயில் இயங்கி வரும் சங்கானை கால் நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் பிரதி சனிக்கிழமை தோறும் முற்பகலில் கோழிகளுக்கு நோய்த் தடுப்பு ஊசி மருந்து போடப்பட்டு வருகின்றது.

இதேவேளை பசுமாடுகளுக்கு செயற்கை முறையில் சினைப்படுத்துதலும் இந்த அலுவலகத்தில் மேற்கொள்ளப்படுகின்றது. (ஒ-135)

### ப. நோ. கூ. ச. அன்பளிப்பு

கொழும்புத்துறை, ஜன. 03

பூநகரித்தளம் தகர்ப்பு வெற்றி நாளை முன்னிட்டு கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் உள்ள பாடசாலையில் கல்வி பயிலும் வறிய மாணவர்களுக்கு புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் சுமார் பத்தாயிரம் ரூபா பெறுமதியான அப்பியாசக் கொப்பிகளை அன்பளிப்பாக வழங்கியது. (க 30)

### இலவசமாக உபகரணங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 3

புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயத்தில் 1994 இல் ஆண்டு 1 இல் சேர்ந்து கல்வி பயிலும் மாணவர்களுக்குத் தேவையான அப்பியாசக் கொப்பிகள், எழுது கருவிகள், வர்ணச் "சோக்" கட்டிகள் போன்றவற்றை வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தினர் இலவசமாக விநியோகிக்கவுள்ளனர். (க)

### புனர்வாழ்வு உதவி

தென்மராட்சி, ஜன. 3

யாழ். மாவட்ட தமிழர் புனர்வாழ்வு கழகத்தில் உதவி பெறும் வறுமைக் கோட்டின் கீழ் வருமானம் உள்ள விதவைகளுக்கு படுக்கை விரிப்புகளும் பாய்களும் வழங்கப்படுகின்றன.

தென்மராட்சிப் பிரிவில்74 பேருக்கும் பளைப் பிரிவில் 46 பேருக்கும் இப் பொருள்கள் அண்மையில் வழங்கப்பட்டன. [த-117]

# 30 கிராம சேவகர் பிரிவுகளில் ஜனசவிய கருத்திட்டம் அமுல்

வலிகாமம் தெற்கு, ஜன 3

ஜனசவிய 15000 கருத்திட்டம் வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட முப்பது கிராமசேவகர்கள் பிரிவில் இருந்து தெரிந்தெடுக்கப்பட்ட இருபத்தேழு கிராம சேவையாளர் பிரிவுகளில் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அநேகமான கிராம சேவையாளர் பிரிவுகளில் கால்நடை வளர்ப்புக்கே அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

உடுவில், சங்குவேலி, சுன்னாகம், தாவடி, கந்தரோடை, ஏழாலை, புன்னாலைக்கட்டுவன், குப்பிளான் போன்ற கிராமங்களில் உள்ள 171 பயனாளிகளுக்கு வருமானத்தை ஈட்டிக் கொடுக்கும் செயல் திட்டமாக இது அமுல்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாதத்தில் எடுக்கப்பட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையில் இப்பயனாளிகளின் செயல் திட்டங்களுக்கென முதற் கட்டமாக ஒவ்வொரு திட்டத்துக்கும் அறுபதாயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் உடுவில் குளம் பெரும் தொகை செலவில் புனரமைக்கப்பட்டு ஆழமாக்கப்பட்டுள்ளது.

கால்நடை வளர்ப்பு மற்றும் பழக்கன்றுகள் உற்பத்தி செய்தல், ஆடு வளர்ப்பு, முயல் வளர்ப்பு, கோழி வளர்ப்பு, விவசாய விதைகள் செப்பனிடல், நீர்ப்பாசன குளங்கள் புனரமைப்பு, உழவுமாடு கலப்பைகள் பராமரிப்பு, போசாக்குணவுகள் தயாரித்தல், பழவகைகளை பதனிடல் போன்ற பல்வேறு செயல் திட்டங்கள் இதன் அடிப்படையில் பயனாளிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, (த-152)

# மூத்த எழுத்தாளரின் படைப்புகள் நூல் வடிவம் பெற வேண்டும்

### கவிதை நூல் வெளியீட்டில் உரை

கொழும்பு, ஜன. 3

"மூத்த எழுத்தாளர்களின் படைப்புக்கள் நூல் உருவம் பெறுதல் வேண்டும். அப்போதுதான் இளைய தலைமுறை தமக்கு முந்திய காலத்தையும், இலக்கிய வளர்ச்சியையும் அறிந்து கொள்ள வாய்ப்பு உண்டாகும். நல்ல எழுத்தாளர்களை ஊக்குவிப்பது வாசகர்களது கடனாகும்."

பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி துரை மனோகரன் இவ்வாறு தெரிவித்தார்.

கவிஞர் இ. சரவணமுத்துவின் "கவிச் சுவடு" கவிதை நூல் மற்றும் கட்டுரைத் தொகுதி என்பவற்றின் வெளியீட்டு விழா அண்மையில் கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவர் திரு செ. குணரத்தினம் தலைமையில் வெளியீட்டு விழா நடைபெற்றது.

"கவிச்சுவடு" நூலினை வீரகேசரி பிரதம ஆசிரியர் திரு ஆ. சிவநேசச்செல்வனும், கட்டுரைத் தொகுதியைத் தினகரன் ஆசிரியர் திரு. இ. சிவகுருநாதனும் வெளியிட்டு வைத்தனர்.

பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை செயலாளர் ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம், தேசிய கலை இலக்கியப் பேரவைத் தலைவர் திரு. சோ. தேவராசா, வித்துவான் சி. குமாரசாமி, புலவர் ஈழத்துச் சிவானந்தன் ஆகியோர் உரையாற்றினர். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## அருணாசலம் கனேசபிள்ளை

அருணாசலம் கனேசபிள்ளை (கலேவெலை முன்னாள் அருணா கோப்பரேசன் உரிமையாளர்) கிளிநொச்சியில் காலமானார்.

அன்னார் காரைநகர் பாலாவோடையைப் பிறப்பிடமாகவும், தற்போது யாழ்ப்பாணம் அபூபக்கர் வீதியில் வசித்தவருமாவார். இவர் யோகாம்பிகையின் அன்புக் கணவரும், தவபாலசிங்கம்(பழைய கண்டி டீசல் கடை காரைநகர்) திருமதி.வி.நேசமணி தேவராசா (பிரான்ஸ்). தயாபரன் (வர்த்தகர், கிளிநொச்சி), திருமதி. தனலஸ்மி, திரு. புலேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையாரும், திரு. விக்னேஸ்வரன் (கொழும்பு), திரு. யோகேந்திரா (காசி—நியூ தேவி ஸ்ரோர்ஸ், பழைய பூங்கா வீதி) ஆகியோரின் மாமனாரும், துஷ்யந்தியின் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்
க. தவபாலசிங்கம்
(மகன்)

6 அபூபக்கர் வீதி
யாழ்ப்பாணம்.
(28745)

## கதிரித்தம்பி கந்தசாமி

கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த கதிரித்தம்பி கந்தசாமி (இளைப்பாறிய ஆசிரியர், யார்க்கரு விநாயகர் வித்தியாலயம், கரவெட்டி) 1-1-1994 அன்று காலமானர்.

அன்னார் செல்வி பாலாம்பிகை (அதிபர், சரஸ்வதி வித்தியாலயம்), செல்வி பாலச்சந்திரமணி (இந்திரா) (ஆசிரியை, திருஇருதயக் கல்லூரி, கரவெட்டி), செல்வி பாலசுகந்தா (ஆசிரியை, வடமத்திய மகளிர் கல்லூரி, நெல்லியடி). திருமதி செ. பாலராணி (முன்னாள் ஆசிரியை. விவேகானந்தா வித்தியாலயம் கொட்டாஞ்சேனை (USA). பாஸ்கரன் (ஆசிரியர் பொன்னம்பலம் வித்தியாலயம், கரணவாய்) ஆகியோரின் அன்புத் தந்தையும். ச. செல்வேந்திரன் (USA), அன்பு மாமனாரும். ஆதித்தன், ஆகவன் (USA) ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 02-01-1994 அன்று நடைபெற்றன.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
க. பாஸ்கரன் (மகன்).

கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.
(28735)

## கந்தையா நன்னித்தம்பி

மயிலிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது அளவெட்டியை வசிப்பிடமாகக் கொண்டவருமான கந்தையா - நன்னித்தம்பி (முன்னாள் இ. மி. ச. ஊழியர்) 02 - 01 - 94 இல் காலமானார்.

இவர் திருமதி இராசம்மாவின் அன்புக் கணவரும், கதிர்காந்தன் (இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்), கெங்காதரன் (சுவிஸ்), மதிவதனி (பட்டப் படிப்புகள் கல்லூரி), மஞ்சுளா ஆகியோரின் அன்புத் தந்தையும், அமுதினியின் மாமனாரும், சுவாமிநாதன் (முன்னாள் சிமெந்துக் கூட்டுத்தாபனம்),இராசரத்தினம்(முன்னாள் சிமெந்துக் கூட்டுத்தாபனம்), தங்கரத்தினம் ஆகியோரின் சகோதரரும், காலம்சென்ற தம்பையா, காலம்சென்ற பொன்னையா, கனகரத்தினம், சின்னத்தம்பி, சுப்பிரமணியம். நாகம்மா ஆகியோரின் மைத்துனரும், சந்திரகாந்தன் (ஜேர்மனி), செந்தூரனின் பெரிய தந்தையும், காலஞ்சென்ற ஸ்ரீரஞ்சன், சயந்தன் (ஆசிரியர் மகாஜனாக் கல்லூரி), ஜெயரஞ்சன் (பிரான்ஸ்), ஜெயந்தன், சிவலோகநாதன், (ஜேர்மனி), பாலசுப்பிரமணியம், பஞ்சகரன், சிவகுமார், கெங்காதேவி, மோகனசௌந்தரி அம்மாள், ஈஸ்வரி, நாகேஸ்வரி, இராசேஸ்வரி அம்மாள் ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 03-01-94 இல் அளவெட்டியில் உள்ள இல்லத்தில் 9.00 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந கதிர்காந்தன்
(மகன்)

அளவெட்டி. (28747)

## சொர்ணலட்சுமி தம்பிராஜா

வட்டு கிழக்கு சித்தன்கேணியைச் சேர்ந்த சொர்ணலட்சுமி காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற நரசிங்கம் தம்பிராஜ வின் அன்பு மனைவியும், திருமதி செல்வமலர் மகேஸ்வரன், கணேசராஜா (நீர்ப்பாசன இலங்கா, தொழில் நுட்ப உத்தியோகத்தர், வவுனியா), செல்வராஜா (ஓய்வுபெற்ற வரைபடவியலாளர்), திருமதி பத்மாவதிதேவி-சதானந்தன், நமநாதன் (அதிபர், முஸ்லிம் பாடசாலை, எட்டியாந்தோட்டை), சற்குருநாதன் (நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபை, பிரதி முகாமையாளர், திருகோணமலை), திருமதி புனிதவதி செல்வரட்ணம் (முறைசாராக் கல்வி ஆசிரியை), தணிகாசலம் (ஜேர்மனி), ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 02-01-94 அன்று வட்டுகோட்டை வழுக்கையாறு மயானத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகின்றேன்.

தகவல்:
திருமதி புனிதவதி செல்வரட்ணம்
(மகள்)

வட்டு கிழக்கு,
சித்தன்கேணி
(28748)

## கு சி பொன்னுத்துரை
### (கால் முன்னாள் வர்த்தகா K.S.P)

வேலணை கிழக்கு, செல்வநாயகம் வீதியைப் பிறப்பிடமாகவும் சுண்டுக்குளி இல 26, சந்தன மாதா கோயில் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய கு சி பொன்னுத்துரை 1 1 94 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் வசந்தா (ஆசிரியை சிவமடு வே/க/க/க பாடசாலை). வசிலா விஜயகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் காலம் சென்றவர்களான ஆறுமுகம், கதிரவேலு, செல்லத்துரை கற்பகம், சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் இராசேந்திரம் (நயினாதீவு (மாணிக்கம் ஸ்ரோஸ் சின்னக்கடை),ஆகியோரின் மாமனாரும் விதுஷாவின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
பா. இராசேந்திரன்
(மருமகன்)

26 சந்தனமாதா கோயில் வீதி,
சுண்டுக்குளி.
யாழ்ப்பாணம்.
(28750)

## வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஜன. 3

கடந்த வெள்ளியன்று திருமலை மாவட்டத்தில் புல்மோட்டையில் இராணுவத்தினர் பதுங்கி இருந்து தாக்கிய சம்பவத்தில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான மேஜர் ஜெயம் அல்லது அருள் (பரசுராமன் சோமசீலன்—குச்சவெளி) என்பவர் வீரச்சாவடைந்தார். (ஓ-5)

அடுத்த---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டது.

ஹட்டனில் நடைபெற்ற இ. தொ. கா. தேசிய சபைக் கூட்டத்துக்கு செல்லச்சாமியோ அல்லது அவர் பக்கம் உள்ள மாகாண சபை உறுப்பினர்களோ செல்லவில்லை.

தன்னைக் கலந்தாலோசிக்காது இக்கூட்டங்கள் ஒழுங்கற்ற முறையில் கூட்டப்பட்டதால் தாம்அவற்றில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று செல்லச்சாமி ஏற்கனவே கூறியிருந்தார். (உ-எ-6)

## திறப்பு விழா

ஜனசக்தி கருத்திட்டத்தின் கீழ், நெல்லியடி கிராம சேவை அலுவலர் பிரிவில் தட்டச்சு, சுருக்கெழுத்து பயிற்சி நிலையம் இன்று திங்கட்கிழமை யாழ். அரசாங்க அதிபர் திரு கா. மாணிக்கவாசகரால் திறந்து வைக்கப்படவுள்ளது.

கரவெட்டி பிரதேச செயலாளர் திரு செ. ஸ்ரீநிவாசன் தலைமையில் திறப்புவிழா இன்று நண்பகல் 12 மணிக்கும் 2 மணிக்கும் இடையில் நடைபெறும் (ஓ-173)

## கற்கை நெறிகள்

யாழ்ப்பாணம், ஜன 3

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் இம்மாதம் இசைரசனை பற்றிய பொது விரிவுரைத் தொடரும், பொது வாழ்வில் எந்திர பொறியியல் எனும் அடிப்படைத் கற்கை நெறியும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

18 வயதிற்கு மேற்பட்ட எவரும் இக்கற்கை நெறிகளில் சேர்ந்து பயிலலாம் என்றும் ஆர்வமுள்ளவர்கள் எதிர் வரும் புதன் கிழமைக்கு முன் விண்ணப்பிக்கலாம் என்றும் அறிவிக்கப்படுகிறது.

இ தொ கா--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டி இ. தொ. காவுக்கு பாதகமான பல அறிவிப்புக்களை விடுத்துள்ளார் என்று குற்றம் சாட்டிய தொண்டமான், அவர் மீது இ. தொ. கா. வைத்திருந்த நம்பிக்கை முற்றாகச் சிதைவடைந்து போய்விட்டதாகவும் சொன்னார். (உ-எ-6)

விடுதலைப்-

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்த கருத்துக்களில் சில வருமாறு;-

சிறுபான்மையின மக்களுக்குக் கூடுதலான அதிகாரங்களை வழங்க நான் எப்போதும் தயாராகவே உள்ளேன்.

எனினும்— தீவிரவாதத்துக்கு முற்றுப் புள்ளி வைப்பது எனது அடுத்த முக்கிய பணியாக இருக்கும்.

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுகள் நடத்தவும் நான் தயார். எனினும் விடுதலைப் புலிகளின் தனி நாடு கோரிக்கையை ஏற்க முடியாது.

இலங்கையின் இறையாண்மை, எல்லைக் கட்டுக்கோப்பு ஆகியவற்றை விட்டுக் கொடுக்க நான் தயாராக இல்லை.

இலங்கைத் தமிழர்களின் ஒரே பிரதிநிதி தாம் என்பதை நிரூபிக்க தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தேர்தலில் போட்டியிட முன்வர வேண்டும்.

கிழக்கிலும் வவுனியாவிலும் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவது என்ற எமது முடிவு சரியானதே.

கிழக்கு மக்களுக்கு உள்ள வாக்களிக்கும் உரிமையை மறுக்க முடியாது — என்றார்.

இவ்வாண்டு டிசம்பரில் நடக்க விருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் தாம் வெற்றி பெறுவது உறுதி என்றும்—

1995 மார்ச்சில் நடக்கவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலிலும் ஐக்கிய தேசியக் கட்சியே வெற்றி பெறும் என்றும் — அவர் மேலும் தெரிவித்தார். [அ-எ-5]

## யுத்தத்தால் தீர்வு---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்று விடுதலைப் புலிகள் இயக்கம் உலகில் மிகவும் பிரபலம் மிக்க போராளி இயக்கமாக பரிணமித்துள்ளது.

இன்றைய நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அவர்களை அழைப்பின் அவர்கள் அதற்கு வரமாட்டார்கள். அதற்குரிய பொருத்தமான சூழ்நிலையை அரசு ஏற்படுத்தாததே அதற்குக் காரணமாகும்.

ஆகவே முதலில் பொருத்தமான சூழ்நிலையை அரசு ஏற்படுத்த வேண்டும். அதற்கு ஆரம்பத்தில் வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் மக்களுக்கு அவர்களின் அரசியல் மற்றும் உரிமைகளை வழங்க வேண்டும்.

தமிழ் மக்களுக்கு மட்டுமல்லாமல் சில மாகாண சபைகளில் கூட ஜனநாயகம் நிலவ அரசு அனுமதிக்காது போல் தென்மடுகிறது.

தெற்கில் சமாதானத்துக்கான போராட்டங்கள் ஒன்றிணையுமாயின் — அவை அடுத்த 3 மாதங்களுக்குள் இணையுமென நான் நம்புகிறேன் — அது பேரலையாகப் பிரவசிக்கும் அப்போது அனைத்து அரசியல் கட்சிகளும் அதனை அலட்சியம் செய்ய முடியாத நிலை ஏற்படும்.

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு அரசு ஏதாவதொரு அரசியல் தீர்வை கண்டு பிடிக்காவிடின் மக்களே அரசுக்கு எதிராகக் கிளம்பக் கூடும்.

1974 இல் பத்துக்கு குறைவான உறுப்பினர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் உயக்கம் இன்று — இருபது ஆண்டுகளின் பின்னர் 10 ஆயிரத்துக்கும் அதிக உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

அரசாங்கத்தைப் போலவே விடுதலைப் புலிகளுக்கும் வடக்கு - தெற்கில் உள்ள மக்களுக்கும் இப்பிரச்சினைக்கு யுத்தம் மூலம் தீர்வு காண முடியாது என்பது புரிந்துள்ளது.

ஆகவே இரு தரப்பும் இணைந்து அரசியல் தீர்வு காணவேண்டும்.

சமஷ்டி முறையைப் பரிசீலிக்க தயார் என்று புலிகள் அறிவித்துள்ளனர். ஆனால் ஜனாதிபதி விஜேதுங்காவின் அரசு அதற்கு எவ்வித பதிலையும் தரவில்லை.

புலிகளும் அரசும் பேச்சு நடத்த நாம் வழிவகை செய்ய வேண்டும்.

ஆனால் வடக்கு - கிழக்கு தமிழ் மக்களுக்கு அவர்களின் அரசியல் மற்றும் பிற உதவிகளை வழங்கிய பின்னரே அதனை நாம் செய்ய முடியும்.

தமது உரிமைகள் வழங்கப்படாவிட்டால் கொழும்பு அரசுடன் பேசுமாறு புலிகளை தமிழ் மக்கள் நிர்ப்பந்திக்க மாட்டார்கள் — என்றார். (உ-6)

அபிவிருத்தி---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாநகர சபை வழங்கிய திட்டங்களை, நியூயோர்க்கில் உள்ள தனது தலைமையகத்துக்கு ''யுனிசெப்'' சமர்பித்துள்ளது. (ஓ-3)


உ
சிவமயம்

**பாராட்டுகிறோம்**

தனது இடைவிடாத சுயமுயற்சியினால் அண்மையில் நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் திறமைச்சித்தி பெற்று, தான் கல்விபயின்ற இருபாலை C.C. தமிழ்க்கலவன் பாடசாலைக்கும், இருபாலை எக்ஸ்பிரஸ் கல்விநிறுவனத்துக்கும், மற்றும் அதிபர், ஆசிரியர்களுக்கும் பெருமை தேடித்தந்த

செல்வன் சிவேந்திரக் குருக்கள்-குமரேசசர்மாவை

மேன்மேலும் கல்வியில் சிறந்துவிளங்க இறை ஆசி வேண்டி உள்ளன்போடு பாராட்டி வாழ்த்துகிறோம்.

வணக்கம்
உறவினர்கள்
சி (6913)

**SPECIAL ENGLISH**

* A/L பரீட்சை முடித்தவர்களுக்குரியது
* சகல மொழித்திறன்களையும் கொண்ட கற்கை நெறி.

**ஆரம்பம்: 07-01-1994**
வெள்ளி பி. ப. 1.30

ஆசிரியர்
த. ந. பஞ்சாட்சரம்

மேலதிக விவரங்களுக்கு:
- நிர்வாகி

**NEW SCIENCE HALL**
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
(சி/6911)

**NEW SCIENCE HALL**
KANNATHIDDY ROAD, JAFFNA.

**94 A/L DAY CLASSES**

PHYSICS CHEMISTRY
BOTANY ZOOLOGY
PURE. / APPLIED MATHS

* எமது வழமையான ஆசிரியர் குழு *

**ஆரம்பம் 04 - 01 - 94**
செவ்வாய் காலை 8-00 மணி

குறிப்பு:
1) பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் எக்காரணம் கொண்டும் அனுமதிக்கப்படமாட்டார்கள்.
2) அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

- நிர்வாகி

(சி-6912)

**விற்பனைக்கு**

பாவிக்கக் கூடிய நிலையில் உள்ள பெற்றோலில் இயங்கும் வுல்ஸ்லி (Wolsley) காரும், மொறிஸ் (Morris) வானும் விற்பனைக்கு உள்ளன

நேரில் தொடர்பு கொள்க:
212/1, கோவில் வீதி,
(கைலாசபிள்ளையார் கோவில் முன்பாக)
நல்லூர்.

**தேவை**

நல்ல தரத்தில் உள்ள, பாவிக்கக்கூடிய பெற்றோல் என்ஜின் ஒக்ஸ்போர்ட் கார் தேவை.

என்ஜின் இல்லாது "பொடி" (Body) மட்டும் இருந்தாலும் போதுமானது.

நேரில் தொடர்பு கொள்க:
212/1, கோவில் வீதி,
(கைலாசபிள்ளையார் கோவில் முன்பாக)
நல்லூர்.

**கப்பல் மூலம் வரவழைப்பு**

**பிறிமா (PRIMA) கோழித்தீன் மற்றும் கால்நடை உணவுப் பொருள்கள்**

பிறிமா கோழித்தீன், மாட்டுத்தீன் மற்றும் பிறிமா பண்ணை உணவுகளுக்கும் கால்நடை மருந்துப் பொருள்களுக்கும்

**மாலவன் வர்த்தக நிலையம்**

**MALAVAN TRADE CENTRE**

138, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

கப்பல் மூலம் எவ்வளவு தொகையானாலும் யாழ்ப்பாணத்திற்கு ஒழுங்கு செய்து தருகின்றோம். உடனடியாக தொடர்பு கொள்ளவும். பிறிமா கோழிக்குஞ்சு வகைகட்கு முன் கூட்டியே எம்மிடம் பதிவுசெய்து கொள்ளுங்கள்.

பிறிமாவின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்:-

**AUTHORISED DEALERS OF CEYLON GRAIN ELEVATORS LIMITED PRIMA FEEDS**

[28744]


# மரண அறிவித்தல்கள்

## DR. சண்முகலிங்கம் பாலச்சந்திரன்
### (ஊர்காவற்றுறை முன்னாள் வைத்திய அதிகாரி)

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், பிளாக் வீதி, சங்கானையை வதிவிடமாகவும் கொண்ட Dr. S. பாலச்சந்திரன் 1-1-94 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாலினியின் அன்புக் கணவரும், மதன்மோகன், செல்வஜித் St. John's College, old boys), தனுஜா (J/ Holy family Convent) ஆகியோரின் தந்தையும்,காலஞ்சென்றT.சண்முகலிங்கம் மற்றும் பதுமமலர் தம்பதிகளின் மூத்த புதல்வனும், காலஞ்சென்ற S. A. மாணிக்கவாசகர் தம்பதிகளின் அன்பு மருமகனும், திருமதி சரோஜினி தேவராஜன் (ஆசிரியை, யாழ்/வைத்தீஸ்வரா), திருமதி இந்திராணி இராஜநாதன் (ஆசிரியை, கொழும்பு, விபுலானந்தா வித்தியாலயம்), பாலேஸ்வரன் (U.K.), ஆகியோரின் அன்புச் சகோதரனும், சந்திரவதனா (U.K.), ஜெயக்குமார், (U.K.), தேவராஜன், இராஜநாதன், லக்ஷ்மி (U.K.) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
பா. மதன்மோகன்
[மகன்]

192, மானிப்பாய் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
(28749)

## கணபதிப்பிள்ளை வெற்றிவேல்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், பிரம்படி கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை வெற்றிவேல் (முன்னைநாள் கணக்காளர்) நேற்று 02-01-94 காலமாகிவிட்டார்.

இவர் (வைத்தியர்) கணபதிப்பிள்ளை நாகம்மாவின் மகனும், குருசாமியின் (வைத்தியர்) மருமகனும், சோமாபதியின் அன்புக் கணவரும், அமரர் சாமித்தம்பி (சுங்கத் திணைக்களம்), காசிப்பிள்ளை, சதாசிவம் (வைத்தியர்), பரஞ்சோதி ஆகியோரின் சகோதரரும், நாகராணி (ஆசிரியை, வேலணை ம. ம.வித்தியாலயம்), கனகநாயகம் (ஆயுள்வேதக் கல்லூரி), கனகராசா (யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர்), சிவகுமார், நாகநாதன் (கொக்குவில் இந்துக் கல்லூரி, ஆண்டு - 93 மாணவர்கள்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அமரர் தனபாலசிங்கம் (பொறியியலாளர்), அமரர் நவமணி-கனகாம்பிகை-மன்மதராயன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை அவரது இல்லத்தில் இன்று (3-1-94) பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

தகவல்
கனகநாயகம்
மகன்)

பிரம்படி,
கொக்குவில்.
[28751]

## துரையப்பா சிவபாலன்
### (இளைப்பாறிய இலங்கை வங்கி காசாளர் - யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த துரையப்பா சிவபாலன் 02 - 01 - 94 இல் சிவபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான முகாந்திரம் கந்தையா துரையப்பா இராசாம்பாள் ஆகியோரின் ஏக புத்திரனும், கா. ஆனந்தமனோகரி, பா. இராஜேஸ்வரி, வி. சிவனேஸ்வரி, பொ. யோகேஸ்வரி, சி. கமலாதேவி, இ. சாரதாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் நா. காசிப்பிள்ளை, வ. பாலசிங்கம், கு. விவேகானந்தன், வே. பொன்னம்பலம், காலம்சென்ற பா. சிவகணநாதன், ந. இரங்கநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
கா. ஜெகதீசன்
(மருமகன்)

ஸ்ரீ இராமகிருஸ்ணா குடில்,
29/11, உடையார் லேன்,
வண்ணார்பண்ணை
(28752)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 03 - 01 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org